பொதுக் கலைமாணிப் பரீட்சை (வெளிவாரி) 2019

**Philosophy IV (PHG IV)** மேலைத்தேய மெய்யியல்

**ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. இவ்வினாத்தாளில் மொத்தமாக பத்து வினாக்கள் உள்ளன.**

1. மேலைத்தேச மெய்யியலின் தோற்றம் பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகத்தைத் தருக.
2. மைலீசிய சிந்தனையாளர்களை சிறப்பாதாரமாகக் கொண்டு கிரேக்க மெய்யியலை அறிமுகம் செய்க.
3. மேலைத்தேய மெய்யியலுக்கான சோக்கிரடீசுக்கு முற்பட்ட மெய்யியலாளரின் பங்களிப்பினை ஆராய்க.
4. வடிவக் கோட்பாடு மற்றும் அரசியல் மெய்யியலை சிறப்பாதாரமாகக் கொண்டு மெய்யியலுக்கான பிளேட்டாவின் பங்களிப்பினை ஆராய்க.
5. ''மத்தியகால மெய்யியலாளர்கள்'' கடவுள் இருப்பு பற்றி அளவையியல் ரீதியாக நிறுவினர் எனக் கூறுவது எவ்வளவு தூரம் சரியானது? உமது விடைக்கான காரணங்களைத் தருக.
6. 'நான் சிந்திக்கின்றேன் ஆகையால் நான் இருக்கின்றேன்' என்ற கூற்றில் டேக்கார்ட் கூறுவது என்ன? விளக்குக.
7. அறிவுமுதல் வாதத்திற்கும் அனுபவமுதல் வாதத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை நீர் எவ்வாறு விளங்கிக்கொள்வீர்?
8. பிரித்தானிய அனுபவமுதல் வாதத்திற்கான டேவிட் ஹியூமின் (David Hume) பங்களிப்பினை விமர்சன ரீதியாக ஆராய்க.
9. அளவையியல் அணுவாதம் அல்லது தர்க்கப் புலனறிவாதம் பற்றிய சிறப்பாம்சங்களை எடுத்துக் காட்டுக.
10. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சுருக்க குறிப்பு எழுதுக.

    1. கோப்பணிக்கன் புரட்சி
    2. ஹெகலின் கருத்து முதல்வாதம்
    3. உடன்பிறந்த எண்ணங்கள்
    4. உடல் - உளப்பிரச்சினை
    5. இருப்புவாதம் (Existentialism)